2/2/1/1/33 2020/07/02

அனைத்து மாகாண சபைகளின் பிரதம செயலாளர்களுக்கும்,
மகாவலி, கமத்தொழில், நீர்ப்பாசன மற்றும் கிராம அபிவிருத்தி அமைச்சின்
மேலதிகச் செயலாளர்களுக்கும்,
மாவட்ட செயலாளர்களுக்கும்,
விவசாயப் பணிப்பாளர் நாயகம்,
மேலதிக விவசாயப் பணிப்பாளர் நாயகம்,
அனைத்து பணிப்பாளர்கள் /மாகாண விவசாயப் பணிப்பாளர்கள்/
மாவட்ட விவசாயப் பணிப்பாளர்கள்/பிரதான விவசாய விஞ்ஞானிகள்/
பிரதான விவசாய நிபுணர்கள்,
பூச்சிகொல்லி கட்டுப்பாட்டுப் பதிவாளர்/மேலதிகப் பணிப்பாளர்கள்/
மேலதிக மாகாண விவசாயப் பணிப்பாளர்கள்,
பிரதி விவசாயப் பணிப்பாளர்கள்/ பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர்கள்,
நிலையப் பொறுப்பு உத்தியோகத்தர்கள் /உதவி விவசாயப் பணிப்பாளர்கள்

**மகாவலி, கமத்தொழில், நீர்ப்பாசன மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சின் 01/2020 ஆம் இலக்க சுற்றறிக்கைக்கு அமைவாக இலங்கை விவசாய சேவையைச் சேர்ந்த III ஆந் தர உத்தியோகத்தர்கள் II ஆந் தரத்துக்கும், II ஆந் தர உத்தியோகத்தர்கள் I ஆந் தரத்துக்கும் பதவியுயர்த்துதல்.**

மகாவலி, கமத்தொழில், நீர்ப்பாசன மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சின் 01/2020 ஆம் இலக்க சுற்றறிக்கைக்கு அமைவாக இலங்கை விவசாய சேவையைச் சேர்ந்த III ஆந் தர உத்தியோகத்தர்கள் II ஆந் தரத்துக்கும், இலங்கை விவசாய சேவையைச் சேர்ந்த II ஆந் தர உத்தியோகத்தர்கள் I ஆந் தரத்துக்கும் பதவியுயர்த்துவதற்காக விண்ணப்பிப்பதற்கு உரியதான மாதிரிப் படிவங்கள் இந்த அமைச்சின் உத்தியோகபூர்வ இணையத் தளத்திலும் விவசாயத் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத் தளத்திலும் பிரசுரிக்கப்பட்டுள்ளது. இலங்கை விவசாய சேவை III ஆந் தரத்திலிருந்து II ஆந் தரத்துக்கு பதவியுயர்த்துதற்காக விண்ணப்பிக்கின்ற உத்தியோகத்தர்கள் "இணைப்பு 1" இல் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரிப் படிவத்தின் ஊடாகவும் இலங்கை விவசாய சேவை II ஆந் தரத்திலிருந்து I ஆந் தரத்துக்கு பதவியுயர்த்துதற்காக விண்ணப்பிக்கின்ற உத்தியோகத்தர்கள் "இணைப்பு 2" இல் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரிப் படிவத்தின் ஊடாகவும் விண்ணப்பிக்க வேண்டும் என தயவுடன் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

02. ஏற்கனவே II ஆந் தரத்துக்கும் மற்றும் I ஆந் தரத்துக்கும் பதவியுயர்வுக்காக விண்ணப்பித்துள்ள உத்தியோகத்தர்கள் மேலே குறிப்பிட்ட "இணைப்பு 1" மற்றும் "இணைப்பு 2" மாதிரிப் படிவங்களின் ஊடாக மீண்டும் விண்ணப்பிக்க வேண்டும் என்பதையும் மேலும் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

03. இது தொடர்பில் II ஆந் தரத்துக்கும் மற்றும் I ஆந் தரத்துக்குமான பதவியுயர்வுக்கான தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள இலங்கை விவசாய சேவை உத்தியோகத்தர்களுக்கு இது பற்றித் தெரிவிக்குமாறும் தயவுடன் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

சுமேத பெரேரா டப்லிவ்டப்லிவ்வீ ஆர்டப்லிவ்பீ ஆர்எஸ்பீ யுஎஸ்பீ என்டீயு
மேஜர் ஜெனரால் (இளைப்பாறிய)
செயலாளர்
மகாவலி, கமத்தொழில், நீர்ப்பாசன மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சு.